# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.

(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


ஆணை நாள் 03.06.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10122/B/2024**

திரு.A.கார்த்திகேயன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
சார்புச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு பணியாளர்
தேர்வாணையம்,சென்னை - 600 003. — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (03.06.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.A.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, திருமதி.R.அனிதா, சார்புச் செயலாளர் மற்றும் திரு.S.பரமசிவம், சார்பு செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 30.07.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (03.06.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 01.03.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், Recruitment of Assistant Commercial Tax Officer தொடர்பாக 8 இனங்களில் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 18.06.2024 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் 09.10.2024ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகி அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து அவரது கருத்தினை தெரிவிக்கத் தவறியுள்ளார்.

4. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், ஆவணங்களின் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்து, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 10122/B/2024**
**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
சார்புச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு பணியாளர்
தேர்வாணையம்,
சென்னை - 600 003.

திரு.A.கார்த்திகேயன்,
No.4, 3rd floor, Sunkurama Chetty Street,
George Town,
Parrys Corner,
Chennai - 600 001.

Copy to: File
Sj/Ps- 12/06/2026